# சமூக ஒளி

# SAMUUKA OLI

Volume — 6

— கல்வியாண்டு —

**1994-95**

SOCIAL SCIENCE UNION
UNIVERSITY OF JAFFNA

## SOCIAL SCIENCE UNION

University of Jaffna

— சமூக விஞ்ஞான மன்றம் —

பொருளியல்துறை

யாழ். பல்கலைக்கழகம்.

305
CAM
AR

அன்பளிப்பு
சமூக விஞ்ஞான மன்றம்
பொருளியல் துறை
யாழ் பல்கலைக் கழகம்.

2007
SOCIAL SCIENCE UNION
DATE. 27/03/1998
UNIVERSITY OF JAFFNA

# "சமூக ஒளி"

# SAMUUKA OLI

## இதழ் 6

ARCHIVES
UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA

## 1994 - 95

- இணை ஆசிரியர்கள் -
க. நித்தியானந்தன்
எஸ். நிலாஷினி

**SOCIAL SCIENCE UNION**
DEPARTMENT OF ECONOMICS
UNIVERSITY OF JAFFNA

# Social Science Union

## 1994 - 95

## DEPARTMENT OF ECONOMICS
## UNIVERSITY OF JAFFNA

### OFFICE BEARERS

**Names**

*Patron:*

**Mr. V. P. Sivanathan**

*Senior Treasurer:*

**Mr. R. Nanthakumaaran**

*President:-*

**Mr. S. Amalathas**

*Vice President:-*

**Miss T. Sumankalaa**

*Secretary:-*

**Mr. R. Kengeswaran**

*Asst. Secretary:-*

**Miss. S. Sabitha**

*Treasurer:-*

**Mr. R. Subramaniam**

*Joint Editors:-*

**Mr. K. Nithiyananthan,**
**Miss. S. Nilasiny**

*Committee members:*

**Mr. J. Jeyakenadi**
**Miss. K. Thayalini**
**Miss. T. Gouthamy**
**Miss, T. Jegatheeswary**
**Mr. S. Mohanabavan**
**Mr. J. Julan**
**Miss. K. Kunavathy**
**Mr. N. Kirubaharan**

# உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் தோற்றம், நோக்கம், செயற்பாடு

— சிறு ஆய்வு —

# A Brief Study of the Origin, Objectivies, and Activities of the World Bank and the International Monetary Fund

எஸ். எஸ். உதயகுமார்

## 1. அறிமுகம் :- (Introduction)

பல்வேறு நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான முயற்சிகளுக்கு 'நிதிப்பற்றாக் குறை' ஒரு பாரிய பிரச்சனையாகவே இருந்து வருகின்றது. எனவே இம் முயற்சிகளுக்கு நிதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இதனால் இத்தகைய நிதிப்படுத்தல் நோக்கில் சர்வதேச ரீதியாக செயற்பட்டு வருகின்ற அமைப்புக்களாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன தொழிற்படுகின்றன, இவ்வகையில் இந்த அமைப்புக்கள் புதிது புதிதாக எழுச்சியடைந்து வருகின்ற பல நாடுகளின் அபிவிருத்தி முயற்சிக்கென வளர்முக நாடுகளுக்குப் பல கோடிக்கணக்கான டொலர்களை வருடாந்தம் பெற்றுக் கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் புனருத்தாரணத்துக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கியான உலக வங்கியும் அதன் பிரிவுகளான சர்வதேச அபிவிருத்திச் சங்கமும், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனமும், இவற்றோடு சர்வதேச நாணய நிதியமும் உலகப் பொருளாதார நலன்களைப் பேணுகின்ற இரு தூண்களாக விளங்குகின்றன.

சு. சி. உதயகுமார் B. A. (Hons) **Jaffna**
*தற்காலிக விரிவுரையாளர்*
*பொருளியற்றுறை*
*யாழ். பல்கலைக்கழகம்.*

## 2. உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் தோற்றம் (Origin of world Bank and International Monetary Fund)

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த பின் பல நாடுகள் பொருளாதார சீரழிவுக்குட்பட்டு வீழ்ச்சிப்போக்கில் சென்று கொண்டிருந்தன. இந்நிலையில் இவ்வாறு வீழ்ச்சிப் போக்கில் பாதிப்புள்ளாகிக் கொண்டிருந்த நாடுகளுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டிய தேவை காணப்பட்டது. அத்துடன் 1920, 1930 களில் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட பாரிய பொருளாதார மந்தமும், அதன் விளைவால் ஏற்பட்ட நாணயச் சீர்குலைவும் மீண்டும் ஒருமுறை தோன்றலாம் என்ற அச்சமும் எல்லோரிடமும் காணப்பட்டது. எனவே இந்த அச்சத்தில் இருந்து விடுபட்டு நாணய சீரழிவு ஏற்படாது உறுதி நிலையினை ஏற்படுத்த வேண்டிய தேவையும் உணரப்பட்டது. இவ்வாறு உணர்ந்த பிரதான மேற்கத்தைய நாடுகள் 1944 ஆம் ஆண்டு யூலை மாதம் ஐக்கிய அமெரிக்காவில் நியூஹம்ப் செயரில் ( Newhompshire ) இருக்கும் பிரெட்டன் வூட்ஸ் ( Bretton Woods ) என்ற இடத்தில் மாநாடு ஒன்றை நடாத்தினார்கள். இம் மாநாட்டில் சீரழிவுக்குட்பட்டிருந்த சர்வதேச பொருளாதாரத்துக்கு புனர்வாழ்வளிக்

கக்கூடிய தீர்வினை காணும் பொருட்டும், நாணயச்சீரழிவில் இருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை காணும் பொருட்டும் கவனம் எடுக்கப்பட்டது. இதன் விளைவாக சர்வதேச ரீதியில் புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (தற்போதைய உலகவங்கி) நாணய உறுதிப்பாட்டினை மேற்கொள்ள சர்வதேச நாணய நிதியம் என்ற இருபிரதான நிறுவனங்களின் அமைப்புக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு 28 நாடுகளால் கைச்சாத்திடப்பட்டது. தொடர்ந்து 1945ஆம் ஆண்டு டிசம்பரில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றுதொடக்கம் இன்றுவரையும் உலக பொருளாதார ரீதியில் மிகவும் கூடிய செல்வாக்கினைச் செலுத்தி வருவதோடு சர்வதேச அபிவிருத்திக்கும் புனர்வாழ்வுக்கும் உதவி வருகின்ற இரு தூண்களாக செயற்படுகின்றது.

இவ்வாறு 1945 முதல் செயற்படத் தொடங்கிய இந்த நிறுவனங்கள் போரின் காரணமாக சீர்குலைந்து காணப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்களுக்கு நீண்டகால கடன்கள் வழங்குவதன் ஊடாக உயிரூட்டுவதையே புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கியான உலகவங்கியின் ஆரம்பகால பிரதான குறிக்கோளாகக் காணப்பட்டது. அதேபோல் 1920, 1930 களில் ஏற்பட்ட நாணயச் சீரழிவு போல மீண்டும் ஒரு முறை ஏற்பட இடமளிக்காது நாணயத் தொழிற்பாட்டில் ஓர் உறுதியான நிலையைக் கடைப்பிடிக்கக்கூடிய வகையில் செயற்படும் தன்மையை ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியம் பிரதான குறிக்கோளாக கொண்டு செயற்பட்டது. எனினும் இவ்வாறு இரு நிறுவனங்களும் வெவ்வேறு நோக்குகளில் செயற்படுகின்ற தன்மை ஆரம்பத்தில் காணப்பட்டது. ஆனால் இன்று இவ்விரு நிறுவனங்களும் செயற்படுகின்ற செயற்பாடுகள், கொண்டுள்ள நோக்கங்களை உற்று நோக்கும்போது இவ்விரு நிறுவனங்களும் எதிர்காலத்தில் ஒன்றாகி ஒரே நோக்கத்தில் செயற்படுமோ என்ற வகையில் பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. எனவே இவற்றின் நோக்கங்கள் பற்றிப் பார்ப்போம்.

## 3. உலகவங்கியின் நோக்கங்கள்/குறிக்கோள்கள் :-

## (Aims and Objectivies of the World Bank)

1944 ஆம் ஆண்டு யூலை, மாதம் பிரெட்டன் வூட்ஸ் என்ற இடத்தில் நடைபெற்ற மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் பிரேரிக்கப்பட்டு 28 நாடுகளால் கைச்சாத்திடப்பட்டது. பின்பு 1945 டிசம்பர் தொடக்கம் சர்வதேச புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான வங்கி (IBRD) தாபிக்கப்பட்டது. இது பின் விரிவடைந்து வந்து 1978களில் சுமார் 132 அங்கத்துவ நாடுகள் கொண்டு செயற்பட்டதோடு 1990களில் 153 அங்கத்துவ நாடுகளைக் கொண்டு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன் செயற்பாடு ஆரம்பத்தில் இரண்டாம் உலக யுத்தத்தால் சீரழிவுக்குட்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு உதவுகின்ற தன்மை காணப்பட்டது. பின்னர் 1950களில் இருந்த இதன் உதவி 3ஆம் உலக நாடுகள் பக்கம் திரும்பியதையும் அவதானிக்கலாம். இதுமட்டுமன்றி இம் மூன்றாம் உலக நாடுகளுக்கு விசேடமான நிதிச் சேவைகள் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த நோக்கத்தினை செயற்படுத்த இலகுவாக 1956ஆம் ஆண்டு யூலை மாதம் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) என்பதை உருவாக்கி அதனை தன்னிச்சையாகச் செயற்

படவிட்டது. பின் இது 1957இல் பெப்ரவரி மாதம் தொடக்கம் ஐ. நாவுடன் இணைந்து விசேட நிறுவனமாகச் செயற்படத் தொடங்கியது. அதனைவிட 1960ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA) உருவாக்கப்பட்டது. ஆனால் இதனை நிர்வகிக்கும் பொறுப்பை உலக வங்கி தன் கையிலேயே கொண்டு செயற்பட்டது. எனவே IBRD ஆன தற்போதைய உலக வங்கியினதும் அதன் பிரிவுகளான சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் (IFC) சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) என்பனவற்றினதும் நோக்கங்கள் என்ற வகையில்:

1. உற்பத்தி நோக்கங்களுக்கான முதலீடுகளுக்கு தேவையான மூலதனத்தை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்குவதன் மூலம் அந்நாடுகளில் புனரமைப்பையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த வழி செய்தல்.

2. தனியார் வெளிநாட்டு மூலதனங்களை ஊக்குவித்தல்.

3. நியாயமான நிபந்தனைகளுடன் கூடிய தனியார் மூலதனம் கிடைக்காதபட்சத்தில் உற்பத்தி நோக்கங்களுக்கான கடன்களை வழங்குதல். (வங்கி தனது வளங்களில் இருந்து இதனை வழங்கும்)

4. சர்வதேச வர்த்தகத்துக்குச் சமமான வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் அங்கத்துவ நாடுகளின் உற்பத்திமூலங்களின் அபிவிருத்திக்கான சர்வதேச முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் சென்மதி நிலுவைச் சமநிலையினை நிலை நிறுத்தல் என்ற வகையில் ஆரம்ப நோக்கங்களைக் கொண்டு, உலக வங்கி செயற்பட உலக வங்கியின் பிரிவுகளில் ஒன்றான சர்வதேச அபிவிருத்திச் சங்கம் பின்வரும் பல நோக்கங்களைக் கொண்டு செயற்படுகிறது.

1. நெகிழ்வுத்தன்மையுடைய (அதாவது பாரம்பரிய கொடுகடன் நிபந்தனைகளுக்கு மாறான) கடன்களை அங்கத்துவம் வகிக்கின்ற குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்குவதன், மூலம் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தி,

ஆ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

ஆ) உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் ஊடாக விருத்தியை உயர்த்துகின்ற பிரதான நோக்கத்தினை கொண்டு செயற்படல்.

2. உலக வங்கியின் ஏனைய கருமங்களில் ஒத்துழைப்பு வழங்குதல்.

3. பல சலுகைகள் கொண்ட வளைந்து கொடுக்கக்கூடிய நியந்தனைகளின் பெயரில் கடன்கள் உதவிகளை வழங்குதல்.

4. குறித்த நாட்டின் சென்மதி நிலுவையை பாதிக்காத வகையிலும் அதேநேரம் அங்கத்துவ குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவி வழங்குவதன் மூலமும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல், உற்பத்தித்திறனை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

5. மிகவறிய நாடுகளுக்கு தானாகவே முன்வந்து உதவுதல் போன்றனவாகும்.

அடுத்து உலகவங்கியின் பிரிவுகளில் ஒன்றான சர்வதேசநிதிக்கூட்டுத்தாபனம் ஆனது உலகவங்கியின் நிதியினை விட வேறுபட்ட நிதியினைக் கொண்டு உள்ளதுடன் ஐ. நாவுடன் இணைந்து விசேடித்த நிறுவனமாக செயற்படுகின்ற அதே நேரம் வங்கியுடன் மிக நெருக்கமாகவும் உள்ள இத்தாபனத்தின் நோக்கங்களாக

1. அங்கத்துவ குறைவிருத்தி நாடுகளில் தனியார் உற்பத்திகள் முயற்சிகளின் வளர்ச்சியை ஊக்குவித்தல் அதனூடாக பொருளாதார விருத்தியை ஏற்படுத்தல்.

2. நியாயமான நிபந்தனைகள் உடன் போதியளவு தனியார் மூலதனம் கிடைக்காத சந்தர்ப்பத்தில் நிரப்பிக் கொடுப்பது தொடர்பாக அரச உத்தரவாதம் இல்லாத நிலையிலும் முதலீட்டினை மேற்கொள்ளல்.

3. குறைவிருத்தியை சேர்ந்த உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய வகையில் தனியார் முயற்சிகளின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தல் ஊடாக அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

4. முதலீட்டுக்கான வாய்ப்புக்களையும் வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் முதலீட்டையும் அனுபவம் உள்ள முகாமைமையினையும் ஒன்றுசேர்க்கின்ற ஒரு நிறுவனமாகத் தொழிற்படல் போன்ற பல நோக்கங்களைக் கொண்டு செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## 4. சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கங்கள்/குறிக்கோள்கள் :-

## (Aims and Objectives of the International Monetary fund)

1944ஆம் ஆண்டு யூலை மாதம் பிரெட்டன்வூட் இடத்தில் நடைபெற்ற மாநாட்டின் மூலம் உருவான மற்றைய நிறுவனமாக சர்வதேச நாணயநிதியம் விளங்குகின்றது. சர்வதேச ரீதியாக 1920, 1930 களில் உலகப் பொருளாதாரங்களில் ஏற்பட்ட பாரிய பொருளாதார மந்தத்தின் விளைவால் ஏற்பட்ட நாணயச் சீர்குலைவு மூலம் பெற்ற அநுபவத்தை பல நாடுகள் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் உலக யுத்தமுடிவின் பின் மீண்டும் ஒருமுறை இப்படியான ஒரு நாணயச் சீர்குலைவு உருவாகக்கூடும் என்ற அச்சநிலையை அனேகமான நாடுகள் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், முன்னர் ஏற்பட்ட நாணயச் சீர்குலைவில் இருந்த நாடுகளை விடுவிக்கவும், சர்வதேச ரீதியாக எதிர்காலத்தில் பொருளாதாரங்களுக்கிடையே ஒரு உறுதியான நாணயத் தொழிற்பாட்டினை மேற்கொள்ளும் வகையிலும் 1944 இல் பிரிட்டன்வூட் மாநாட்டைத் தொடர்ந்து 1945 டிசம்பர் தொடக்கம் நாணய அமைப்புக்குப் பொறுப்பான ஒரு ஸ்தாபனமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிதியமே சர்வதேச நாணய நிதியமாகும். இதில் ஆரம்பத்தில் குறைந்த அளவு நாடுகள் அங்கத்துவம் வகித்தாலும் தற்போது 150ற்கு மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. அதுமட்டுமன்றி 2000ற்கு மேற்பட்ட நிரந்தர ஊழியர்களையும் கொண்டு செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இந்த நிதியத்தின் நோக்கங்களை பார்ப்போமாயின் குறிப்பாக,

1. சர்வதேச ரீதியாக பொருளாதாரங்களுக்கிடையே நாணய ஒத்துழைப்பினை உருவாக்குதல்.

2. சர்வதேச ரீதியில் நாடுகளுக்கிடையிலான சர்வதேச வர்த்தகத்தினை விஸ்தரித்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவித்தல், சென்மதி நிலுவைப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுதல்.

3. சர்வதேச ரீதியில் நாடுகளுக்கிடையிலான அந்நிய செலாவணி உறுதிப்பாட்டினை ஊக்குவித்தல்.

4. சர்வதேச ரீதியில் ஒரு ஒழுங்கான செலாவணி அமைப்பினை பேணுதல்.

5. வர்த்தகத்தினை கட்டுப்படுத்தக்கூடிய வெளிநாட்டு செலாவணி கட்டுப்பாடுகளை நீக்குதல்.

6. அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற நாணயக் கொடுப்பனவு விடயங்களில் உதவி புரிதல்.

7. நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற போட்டி அடிப்படையினை நாணயப் பெறுமதி இறக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாது தடுத்தல், என்ற வகையில் பல நோக்கங்களை கொண்டு செயற்படுகின்றது.

மேற்படி நோக்கங்களைக் கொண்ட சர்வதேச நாணய நிதியமானது அங்கத்துவ நாடுகளிடமிருந்து திரட்டுகின்ற சந்தாப் பணம் (அங்கத்துவநாட்டு நாணயத்தில் 75% உம், IMF இனால் விதிக்கப்படும் நாணயத்தில் 25% உம் ஆக பெறப்படும் சந்தாப் பணம்) மற்றும் பெற்றுக் கொள்கின்ற கடன்கள், உதவிகள் மூலமும் பல்வேறு வழிகளில் கடனாகவும், உதவியாகவும் நாடுகளுக்கு வழங்க வசதிகளை ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக அங்கத்துவ நாடுகள் செலுத்துகின்ற சந்தாப் பணத்திற்கு ஏற்ப IMF இன் செயற்பாடுகள் தொடர்பாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையும் பகிரப்பட்டுள்ளது. இதன்படி உலகின் முக்கியமான 7 நாடுகள் கூடிய வாக்குகளை பெறுகின்றது. அதிலும் அமெரிக்கா மட்டும் 20% வாக்கினை கொண்டுள்ளது. இது இவ்வாறிருக்க IMF ஆல் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயற்திட்டங்களுக்கும் 85% பெரும்பாண்மை காட்ட வேண்டும். ஆகவேதான் அமெரிக்கா தன் 20% வாக்குகளை பயன்படுத்தி சில நேரங்களில் "வீட்டோ" அதிகாரம் மூலம் சில திட்டங்களைச் செயற்படுத்த அனுமதி மறுக்கின்றது.

மேலும் நாடுகளுக்கு உதவும் நோக்கில் நிதிப்பிரச்சனை ஏற்பட முன்னரேயே அவற்றை அறிந்து கொள்ள இந்நிதியம் உதவுகிறது. அத்துடன் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளை அனுபவிக்கும் நாடுகளுக்கு உதவிபுரியவென பல "கணக்குகளையும், வசதிகளையும்" உருவாக்கி உள்ளதோடு மட்டுமன்றி உறுதியாக்கற் திட்டங்களை வகுக்கவும் ஆலோசனைகள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக வழங்கப்படும் நிதிவசதிகள் ஆனது சென்மதி நிலுவையின் தன்மையைப் பொறுத்தும், சென்மதி நிலுவை பிரச்சனையைத் தீர்க்க முன்வைக்கும் கொள்கைகளைப் பொறுத்தும் வேறுபட்டு அமையும். நிதியத்தின் அடிப்படை நிதிவழங்கும் கொள்கையின்படி கடன் தொகுதி (Credit Tracle) யின் கீழ் நான்கு தொகுதியின் கீழ் கோட்டாவின் 25%, 25% ஆக கடன் வசதிகள் மேற் கொள்ளப்படும் இதனைவிட சென்மதி நிலுவைப் பிரச்சனையைத் தீர்க்க நிரந்தரமான கொள்கைகள் (Permanant Policies) ஊடாக சிறுகுறிப்பிட்ட தேவைகளுக்கு நிரந்தர வசதிகள் (Permanent Facilities) என்ற வகையில் உதாரணமாக

1. விரிவாக்கப்பட்ட நிதிவசதி (EFF)
2. நட்ட ஈட்டு நிதிவசதி (CFF)
3. தாங்கியிருப்பு நிதிவசதி (BFF)
4. குறைநிரப்பு நிதிவசதி (SFF)
5. விரிவாக்கப்பட்ட வாய்ப்பளிக்கும் கொள்கை (EAP)
6. எண்ணெய் வசதி (OF)
7. வறிய நாடுகளுக்கு உதவுவதற்கான சலுகை அடிப்படையிலான வசதிகள் (CFAPC) போன்ற பல

வசதிகளை ஏற்படுத்தி அதனூடாக வளர்முக நாடுகளுக்கு உதவி வருகின்றது. இது மாத்திரமன்றி நம்பிக்கை நிதியிலிருந்து

கிடைக்கின்ற நிதிமூலம் குறை வருமான நாடுகளுக்கு விசேட எடுப்பனவு கணக்கின் கீழ்.

அ) அமைப்பு ரீதியான செம்மையாக்கல் (சீராக்கல்) வசதி (SAF)

ஆ) விரிவாக்கப்பட்ட அமைப்பு ரீதியான சீராக்கல் வசதி (ESAE)

இ) விசேட கொடுப்பனவின் கணக்குகள் ஊடாக சலுகை அடிப்படையிலும் சென்மதி நிலுவை பிரச்சனையைத் தீர்ப்பதற்கான அல்லது குறைப்பதற்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக உலகவங்கியானது புனரமைப்பு அபிவிருத்தி கருதி நீண்டகால கடன்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் தற்காலிக சென்மதி நிலுவை பிரச்சனைகளை தீர்க்கும் நோக்குடன் அதிகளவு குறுங்கால கடன்களை வழங்கி வருகின்றது. அதே போல் வங்கியானது சிறப்பாக அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கு கடன் வழங்க IMF ஆனது அபிவிருத்தி அடைந்த, அடைந்து வருகின்ற நாடுகளுக்கும் கடன் வழங்குகின்றது. எனினும் வங்கியில் இருந்து கடன்களை வறிய நாடுகள் இலகுவாக பெறக்கூடியதாக உள்ளது. அதேநேரம் IMF இடம் இருந்து வறிய நாடுகள் இலகுவாக கடன் பெற முடியாதநிலை காணப்படுவதும் சுட்டிக்காட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

## 5. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் செயற்பாடுகள்;-

## (Activities of the World Bank and the International Monetary Fund

ஆரம்பத்தில் வங்கியானது அபிவிருத்தி, புனர்நிர்மான செயற்பாடுகளை மேற்கொள்ள, நிதியமானது நாணய உறுதிப்படுத்தல் தொடர்பான செயற்பாடுகளில் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளைத் தீர்க்கின்ற வகையில் செயற்பட்டது. தொடர்ந்து 1970 களில் ஏற்பட்ட (1973–1974) பெற்றோலிய விலை உயர்வு மூலம் உலகநாடுகள் 1980 களில் சென்மதி நிலுவை தொடர்பாகவும், பேரின பொருளாதார ரீதியாக அனுபவித்த நெருக்கடிகள் காரணமாகவும் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்ற வகையில் ஒன்றின் செயற்பாட்டுக்கு மற்றயது வழிவிட்டுக் கொடுக்கவேண்டிய வகையில் இணைந்து செயற்படுகின்ற தன்மையை கொண்டிருப்பதுடன் ஆலோசனைகளைப் பரிமாறியே கடன்கள், உதவிகள் வழங்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றன.

1980 களின் ஆரம்ப கால கட்டத்தில் இருந்து பிரிட்டன் வூட்ஸ் நிறுவனங்களான WB. IMF என்பன சென்மதி நிலுவைப் பிரச்சனைகளை திருத்தியமைக்கவும் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான நிபந்தனைகளை பற்றி உணர்ந்து கொள்வதற்குமான அமைப்பு சீராக்கல் கடன்களையும் உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியிருந்தன. 1980 களின் பிற்பகுதியில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்ற எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பதைப் பேணுவதற்கு அரசாங்கத் தோல்விகள், சந்தைத் தோல்விகள் என்பவை இடையூறுகளாகக் காணப்படுகின்றன. எனவே அரசாங்க சந்தை தோல்விகளை திருத்துவதற்கு அவசியமாக சொத்துரிமைகளை அறிமுகம் செய்தல் என்றநோக்கில் நிறுவன ரீதியான மாற்றங்கள் அவசியமாகும். இவ்வாறு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எனும் கருதுகோள் கொள்கை மட்டத்தில் முக்கியத்துவம் பெற்று வித்தியாசமான வளர்ச்சியை தரும் வகையில்

வேறுபட்ட வளர்ச்சியை நோக்கமாக கொண்டிருந்தது. இந்த வகையில் வருங்கால அபிவிருத்தி வளங்களை (பெற்றோல்) பாதுகாத்தல் மற்றும் நிச்சயமாக மிகக் குறைந்த சூழல் தாக்கங்களையும், வளங்களையும் நீண்டகால நோக்கில் பேணுகின்ற நோக்கம் என்றவகையிலும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் சூழல் அம்சங்களுக்கு கவனம் செலுத்தி, உலக வங்கி சர்வதேச தொழிற்பாடுகளில் மேல் எழுந்துள்ளதை காணலாம்.

பிரிட்டன் வூட்சின் தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்களுக்கும், அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பை கருத்திற்கொண்டு திட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சீராக்கல் திட்டங்கள் 3 வேறுபட்ட நிலைகளின் ஊடாக தோற்றம் பெறுகின்றன. 3 வது கட்டத்தில் தோற்றம் பெறும், நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியின் சுற்றாடல் தேவைப்பாடுகளுக்கு கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் விசேட திட்டமிடல்களில் உண்மையான மாற்றங்களுக்கும் அவற்றை முழுமையான மாற்றங்களுக்கும் உட்படுத்தாமல் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி நிலையில் சாத்தியமான WB, IMF ஆகியவற்றின் சீராக்கல் தந்திரோபாயங்களின் வளர்ச்சி தொடர்பாக சிபார்சுகள் மேற் கொள்ளப்படுகின்றன. ரொபேட் மக்னமாராவின் கூற்றுப்படி (1972 Policy Options) ''தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி இருக்க வேண்டுமா? என்பது கேள்வியல்ல, அது இருக்கவேண்டும்; சூழலில் அது ஏற்படுத்தும் தாக்கம் மதிப்பிட வேண்டுமா? என்பதும் கேள்வியல்ல. அது மதிப்பிடப்படல் வேண்டும். கடைசியாக இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையா? என்பதும் கேள்வியல்ல. அவை பின்னிப் பிணைந்தவைதான்'' என்ற கூற்று குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் அமெரிக்கர் ஒருவரை பாரம்பரியமாக தலைவராக கொண்ட உலக வங்கியும், பாரம்பரியமாக ஐரோப்பியர் ஒருவரை நிர்வாகப் பணிப்பாளராக கொண்ட சர்வதேச நாணய நிதியமும் முறையே அமைப்புரீதியான சீராக்கல் கொள்கை (SAP) உறுதிப்படுத்தல் கொள்கை (SP) என்பனவற்றைக் கடைப்பிடித்து வருகின்ற நிலை அண்மைக் காலத்தில் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுகின்ற வகையில் இவற்றில் புதிதாக உருவாக்கப்பட்ட உறுதிப்படுத்தல் அமைப்பு சீராக்கல் கொள்கை (SSAP)யைக் கடைப்பிடித்து வருகின்றது. சென்மதி நிலுவைப் பிரச்சனைத் தீர்வு, கடன் சுமை குறைப்பு, நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தலை பிரதான நோக்கமாகக் கொண்ட இச்செயற்பாடு எதிர்காலத்தில் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றாகிவிடுமோ என்ற ஊகத்தினை ஏற்படுத்துவதோடு, 1990 களில் ஏற்பட்ட சோவியத் ஒன்றிய உடைவினால் இவற்றின் உதவி மூன்றாம் உலக நாடுகளை விட்டு திசைதிரும்பி உடைந்த சோவியத் ஒன்றிய நாடுகள் பக்கம் சென்றுவிடுமோ என்ற அச்ச உணர்வும் குறைவிருத்தி நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இன்றைய உலகில் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பாரிய நிறுவனங்கள் என்ற வகையிலும், பல கோடிக்கணக்கான டொலர்களை வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கி வருகின்ற வகையிலும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரு நிறுவனங்களும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. ஆகவே இத்தகைய பாரிய நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் பற்றி பரந்தளவில் ஆராய முற்படின் பரந்த ஆய்வாக மாறிவிடும் என்பதால் இந்நிறுவனங்களின் தோற்றம், நோக்கம், செயற்பாடு பற்றி மிகவும் சுருக்கமாகவே இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

# ABBREVIATIONS

| | |
|---|---|
| IBRD | – International Bank for Reconstruction and Development |
| WB | – World Bank |
| IMF | – International Monetary Fund |
| IDA | – International Development Association |
| IFC | – International Finance Corporation |
| EAP | – Enlarged Access Policy |
| EFF | – Extended Fund Facility |
| CFF | – Compensatory Financing Facility |
| BFF | – Buffer Stock Financing Facilities |
| CFAPC | – Concessional Facilities Assist Poorer Countries |
| SSAP | – Stabilisation and Structural Adjustment Policy |
| SFF | – Supplementary Financing Facility |
| OF | – Oil Facility |
| ESAF | – Enlarged Structural Adjustment Facility |
| SAF | – Structural Adjustment Facility |
| SP | – Stabilisation Policy |
| SAP | – Structural Adjustment Poliey |

## Reference


1. Environment and Development Economics. Volume 1 Part 2, May 1996 Policy Options "Bretton Woods intervention Programmes and Sustainable development"— J. B. Opschoor and S. M. Jongma. Page – 143–144,183–201
2. Theory and Problems of International Economics. Third edition – 1990 Dominick Salvatore Chapter - 12 "The International monetary System Past and Present, Page – 216–219, 221–228
3. Trade and developing Countries. Kathryn Morton and Peter Tulloch –1978 Chapter – 07. "Finance and International Trade" Page - 278–280, 2-2.
4. International Economics. Kindleberger and Lindert six edition – 1978 Part IV Adjustment Policies. Chapter 21 - "The debate over Fixed and Flexible exchange rates" Page – 396-401
5. Mentor Volume – I January /95 Part - I. "சர்வதேச நாணய நிதியம் – சீராக்கல் கொள்கைகளும் பொருளாதார அபிவிருத்தியும்" செல்வி கமலகுமாரி பரமசாமி. Page - 41-46.

6. பொருளியலாளன் மலர் — 3 இதழ் — 1 ஏப்ரல் 1989 "சர்வதேச நாணய நிதியமும் கடன் வசதிகளும்" இ. நந்தகுமாரன் Page - 54 60.

7. சிந்தனை தொகுதி V, இதழ் I, IIபங்க ஆனி 1993 "கிராமிய வறுமை தணிப்பு உலக வங்கியின் அணுகுமுறை" சி. அம்பிகாதேவி Page - 67-80.

8. மார்க்கம் "உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும் வறுமை தணிப்பும்" சி. அம்பிகாதேவி Page - 32-36, 48.

9. பொருளியல் நோக்கு செப் / ஒக்ரோபர் / 1978 பக் - 03-12, 16. 17, 22

10. பொருளியல் நோக்கு ஆகஸ்ட் / 1988 பக் - 20-23.

11. பொருளியல் நோக்கு ஜன / பெப் / 1995 பக் — 03-27.

12. Macro Economic Theory and Policy William H. Branson Third Edition Page — 419.

13. The International Monetary Fund 1966–1971 The System under Stress Volume – II Documents Edited by Margaret Garritsen devries Washington–1976.

14. The International monetary Fund 1945–1965 Twenty years of Internationa Monetary Volume – I Chronicle Co-operation by J. Kerth Horse Field Washington — 1969.

கல்வி சுகாதாரத்திற்கான அரச செலவீனம்
(மொத்தச் செலவின் சதவீதமாக)

| நாடுகள் | கல்வி | சுகாதாரம் | நாடுகள் | கல்வி | சுகாதாரம் |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 10,1 | 4 8 | தாய்லாந்து | 21.1 | 8.1 |
| இந்தியா | 2.1 | 1 6 | பிரேசில் | 3.7 | 6.9 |
| பாகிஸ்தான் | 1.6 | 1.0 | மலேசியா | 19.6 | 5.9 |
| நேபாளம் | 10.9 | 4.7 | சிங்கப்பூர் | 22.9 | 6.2 |
| பூட்டான் | 10.7 | 4.8 | ஐ. இராட்சியம் | 13.2 | 13.8 |
| பிலிப்பைன்ஸ் | 15.0 | 4.1 | ஐ. அமெரிக்கா | 1.8 | 16.0 |

(ஆதாரம் : World Development Report, 1994)